# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் – V

**இடம்** :- வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 26.05.2016 காலை 9.30 மணி

சமுகமளித்தோர்:-

- கௌரவ கல்வி அமைச்சர்
- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மா.க.திணைக்களம், வட மாகாணம்.
- வலயக்கல்விப் பணிப்பாளர்கள் (யாழ்ப்பாணம்,வடமராட்சி,தென்மராட்சி ,தீவகம் ,முல்லைத்தீவு, துணுக்காய் , கிளிநொச்சி, வவுனியா வடக்கு, மடு,மன்னார்)
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பிரதம கணக்காளர் ,மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ( மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்)
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்- மாகாணக் கல்வித் திணைக்களம்.
- நிர்வாக உத்தியோகத்தர், மாகாண கல்வி அமைச்சு
- தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்.

செயலாளர், கல்வி அமைச்சு அவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு இந்த வருடத்திற்குரிய ஐந்தாவது மாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.மேற்படி கூட்டத்திற்கு கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் தாமதமாக வருகைதருவார் என்பதையும் தெரிவித்து கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

கடந்த மாதத்திற்குரிய கூட்ட அறிக்கையானது அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இவ்அறிக்கையில் ஏதாவது திருத்தம் இருந்தால் தெரிவிக்குமாறும் கூறினார்.அவ்வாறு திருத்தம் இல்லையென்பதால் அவ் அறிக்கையினை ஏற்றுக் கொண்டு கூட்டத்தினைத் தொடர்ந்து நடாத்திச் சென்றார்.

பாடசாலை கட்டடவேலைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.எமக்கு தரப்பட்ட அனுமதிகள் ஒதுக்கீடுகள் தொடர்பாக வழங்கப்பட்ட வேலைகள் தொடர்பாகவும் ஏற்கனவே செய்து முடிக்குமாறு

அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார், 2015ஆம் ஆண்டுக்கான முடிவுறுத்தப்படாத வேலைத்திட்டம் தொடர்பாக ஆராயப்பட்டது,

**1.கிளி/கோணாவில் மகாவித்தியாலயம்:-** இது வரை வேலைகள் முடிக்கப்படவில்லையென தெரிக்கப்பட்டது,31.05.2016 க்கு முன் வேலைகள் முடிவுறுத்தப்பட வேண்டும் எனவும், காலநீடிப்பு வழங்கப்பட வேண்டாம் எனவும் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

**2.மு/ஆறுமுகம் வித்தியாலயம்:-**வேலைகள் யாவும் முடிவுறுத்தப்பட்டு கொடுப்பனவு உறுதிச் சீட்டு வழங்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார்.

**3. வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம் :-**வேலைகள் யாவும் முடிவடைந்து விட்டதாகவும் இறுதி பட்டியல் (Final Bill) தரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது,31.05.2016 ற்கு முன் இறுதி பட்டியல் ஐ(Final Bill) பெற்று கொடுப்பனவு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது.

**4.யா/நாவாந்துறை றோ.க.த.க.பா :-** வேலைகள் யாவும் முடிவடைந்து விட்டதாகவும் அதில் சில குறைபாடுகள் உள்ளதாகவும் இறுதிபட்டியல் (Final Bill) தரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது 31.05.2016 முன் குறைபாடுகளை நிவர்த்தி செய்து,இறுதி பட்டியலை (Final Bill) பெற்று கொடுப்பனவு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது. 31.05.2016 ற்கு முன் இறுதி பட்டியலை(Final Bill) பெற்று கொடுப்பனவு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது.

**5. யா/ தம்பாட்டி.அ.த.க.பாடசாலை :-** வேலைகள் முடிக்கப்படவில்லை எனவும் 2 ஆம் மாதம் வரை காலநீடிப்பு வழங்கப்பட்டது எனவும்,ஒரு கொடுப்பனவுப் பட்டியல் தரப்பட்டு 2 ஆம் மாதம் கொடுப்பனவு வழங்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. 31.05.2016 ற்கு முன் வேலைகள் முடிவுறுத்தப்பட வேண்டும் எனவும் அதற்கு மேல் கால நீடிப்பு வழங்கப்படமாட்டாது எனவும் வேலை முடிவுறுத்தப்படாத சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு வேறு ஒருவருக்கு வழங்கப்படும் என கடிதம் அனுப்புமாறு செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

## PSDG வேலைகள் :-

## Theme 01 வேலைகள் ஆராயப்பட்டது.

01. வலயக்கல்வி அலுவலக வேலை தொடர்பாக ஆராயப்பட்டது. பழைய கட்டடம் இடிக்கப்பட வேண்டும் எனவும் இதனை அகற்றுவதற்கு ஒரு வார காலம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.
02. எமது அமைச்சின் நிர்வாக கட்டடம்:- சில வேலைகள் முடிக்கப்படாது உள்ளதாகவும் கொடுப்பனவுப் பட்டியல் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அதில் முடிக்கப்படாத சில வேலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவ் வேலைகள் முடிவுறுத்தப்பட்டதும் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

1. **யாழ்ப்பாண வலயம்:**-யா/கோப்பாய் சரவனபவானந்தா வித்தியாலயம், யா/நல்லூர் சி.சி.த.க.பா, யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம், யா/சிறுப்பிட்டி இ.த.க.பா , யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் வேலைகள் யாவும் தொடங்கப்பட்டு விட்டதாகவும் கூறப்பட்டது.

   யா/காசிப்பிள்ளை வித்தியாலயத்திற்கு மட்டும் மதிப்பீட்டில் உள்ளதாகவும், 30.05.2016 திகதி திங்கட்கிழமை மதிப்பீட்டை முடிவுறுத்தி வேலை ஒப்பந்தம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

2. **வலிகாமம் வலயம் :-** யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இவ் வாரம் வேலைகள் ஆரம்பிக்கப்படும் என கூறப்பட்டது, யா/அராலி சரஸ்வதி வித்தியாலயத்திற்கு கேள்வி கோரப்பட்டுள்ளது, யா/யூனியன் கல்லூரி,யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் வேலைகள் தொடங்கப்பட்டு உள்ளதாகவும்,யா/அருணோதயாக் கல்லூரியில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் மழை வெள்ளம் காரணமாக வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும்,யா/இனுவில் மத்திய கல்லூரியிலும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் மரம் ஒன்று தறிக்கப்பட வேண்டியுள்ளதாகவும் அதற்கான அனுமதியினை பெற்று மரம் தறிக்கப்பட்டதும் வேலைகள் தொடர்ந்து நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 5% வேலைகள் நிறைவடைந்து விட்டதாகக் கூறப்பட்டது. யா/நகுலேஸ்வரா வித்தியாலயம் மதிப்பீட்டுத் தொகையை விட ஒப்பந்தத் தொகை 1% அதிகமாகக் காணப்படுவதாகவும் அது தொடர்பாக கல்வி அமைச்சிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

3. **வடமராட்சி வலயம்:-**

யா/புற்றளை மகாவித்தியாலயம் 75% வேலைகள் நிறைவுபெற்றுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யா/நாகர்கோவில் மகாவித்தியாலயம்,யா/தாளையடி றோ.க.த.க.பா, யா/கொற்றாவத்தைஅ.த.க.பா என்பவற்றில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்பட்டது.

யா/ குடத்தனை அ.த.க.பா வில் மீள் கேள்வி கோரப்பட்டுள்ளதாகவும், யா/உடுத்துறை ஆரம்பப்பாடசாலையில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் வெள்ளம் காரணமாக 3 நாட்கள் வேலைகள் நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

4. **தென்மராட்சி வலயம்** :-யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப்பாடசாலையில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும்,யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

5. **தீவகவலயம்:-**ஒரு வேலை கேள்வி ஒப்பந்தகாரரருக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் ஏனைய வேலைகள் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.
6. **கிளிநொச்சி வலயம்:-** கிளி/முகமாலை றோ.க.த.க.பா, கிளி/பளை இந்து ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றில் மழை காரணமாக வேலைகள் இடைநிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. கிளி/வலைப்படு றோ.க.த.க.பாடசாலையில் கேள்வி கோரப்பட்டு விட்டதாகவும், ஏனைய பாடசாலைகளில் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.
7. **முல்லைத்தீவு வலயம்:-** வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
8. **துணுக்காய் வலயம்:-** 3 வேலைகள் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும் ஏனைய இரண்டும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.
9. **மன்னார்** :- மன்/நானாட்டான் ஆரம்பப் பாடசாலை, மன/பூநொச்சிக்குளம் அ.மு.க.பா, மன்/எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றிற்கு கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும்,மன்/தோட்டவெளி றோ.க.த.க பாடசாலைக்கான மதிப்பீட்டு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

10. **மடு:-**மன்/கணேசபுரம் ஆரம்பப்பாடசாலைக்கான கேள்வி கோரப்பட்டுள்ளதாகவும், மன்/பாப்பாமோட்டை றோ.க.த.க.பா , மன்/கருங்கண்டல் றோ.க.த.க.பா ஆகியவற்றில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

11. **வவுனியா தெற்கு:-** 11 வேலைகளில் 3 வேலைகள் கட்டடங்கள் உடைக்கப்படவேண்டியுள்ளதாகவும் அதற்கான கேள்வி கோரப்பட்டுள்ளதாகவும் , ஏனைய வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.
12. **வவுனியா வடக்கு வலயம்:-** இரண்டு வேலைகளும் வேலைகள் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## Theme 1.1.2

**ஆசிரியர் விடுதி அமைப்பது தொடர்பானது**

மேற்படி விடயம் தொடர்பாக வலயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பாகவும் வேலைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

1. **யாழ்ப்பாணவலயம் :-** யா/கஜிதா முஸ்லிம் பெண்கள் பாடசாலை வேலைகள் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும், யா/செட்டித்தெரு அ.மி.த.க.பாடசாலை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.
2. **வலிகாமம் வலயம் :-**யா/ தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
3. **வடமராட்சி வலயம் :-** யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
4. **தென்மராட்சி வலயம் :-** யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
5. **தீவக வலயம் :-** யா/சுப்பிரமணியம் வித்தியாலயம் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாதக் தெரிவிக்கப்பட்டது.
6. **கிளிநொச்சி வலயம் :-** கிளி/விநாசியோடை அ.த.க.பா, கிளி/ஐயனார்புரம் அ.த.க.பா, கிளி/ வட்டக்கச்சி ஆரம்பப்பாடசாலை ஆகியவற்றில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
7. **முல்லைத்தீவு வலயம் :-** வேலைகள் அனைத்தும் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

8. **துனுக்காய் வலயம்** :- வேலைகள் அனைத்தும் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
9. **மன்னார் வலயம்** :- 3 வேலைகளில் ஒரு வேலை கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் மிகுதி இரண்டு வேலைகளும் அடுத்த வாரம் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
10. **மடு வலயம்** :- ம/பெரியபண்டிவிரிச்சான் ஆரம்பப் பாடசாலை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
11. **வவுனியா வடக்கு வலயம்** :- இரண்டு வேலைகளும் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
12. **வவுனியா தெற்கு வலயம்** :- ஆறு வேலைகளும் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது.

## Theme 1.1.3

**ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி தொடர்பாக:-**

1. **யாழ்ப்பாணம் வலயம்** :- வேலைகள் யாவும் தொடங்கப்பட்டுவிட்டதாக கூறப்பட்டது.
2. **வலிகாமம் வலயம்** :- மதிப்பீட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும்,அவை கையொப்பம் இட்டு வரவில்லை என தெரிவிக்கப்பட்டது,2 மில்லியனுக்குட்பட்ட வேலைகளுக்கு அனுமதி வழங்குவதற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அதிகாரம் உள்ளதாகவும், ஒப்பந்த பத்திரம் கையொப்பம் இடுவதும்,வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக நடைபெற வேண்டும்,என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.
3. **வடமராட்சி வலயம்** :- வேலைகள் யாவும் நடைபெற்றுக் கொண்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.
4. **தென்மராட்சி வலயம்** :- வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும்,வேலைக்கான முற்பணம் வழங்கப்பட்டு விட்டதாகவும்,ஒப்பந்த பத்திரம் கையொப்பம் இடப்பட்டதாகவும் கூறப்பட்டது.

## Theme 1.1.4 **குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள்**

மேற்படி வேலைத்திட்டங்களுக்காக அனைத்து வலயங்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.இதற்காக 94 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.இம்மாதம் 1 ஆம், 2ஆம் திகதிகளில் வலயங்களுக்குரிய மொத்த நிதியை வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்,

**நீங்களே பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஒப்பந்தம் கையொப்பமிட்டு வழங்கி அவ்வேலைகளை தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்பார்வை செய்ய வேண்டும். அகவே இவ் வேலைகளை இந்த மாதம் பாடசாலை விடுமுறைக்குள் செய்து முடிக்க அனைத்து வலயக் கல்விப்பணிப்பாளர்களும் முயற்சி செய்ய வேண்டும் என அவர்களிடம் பொறுப்பளித்தார். 100 வீதமும் ஒதுக்கப்படும் நிதியானது செலவு செய்யப்பட வேண்டும் என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.**

**மேற்படி வேலைத்திட்டம் தொடர்பாக ஒவ்வொரு வலயங்களிலும் ஆராயப்பட்டு மிக விரைவாக செய்து முடிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு செயலாளரால் பணிக்கப்பட்டது.இவ்வேலை திட்டங்களை சரியாக முடிக்கும் ஒவ்வொரு தொழில்நுட்பஉத்தியோகத்தர்களுக்கும் புள்ளிகள் வழங்கப்படும் என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.**

## Theme 1.1.5

**முறை சாரா பயிற்சி நிலையம்**

1. **யாழ்ப்பாண வலயம்:**-யா/கோப்பாய் மகாவித்தியாலயத்தில் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.
2. **வலிகாமம் வலயம்:**- தெல்லிப்பளையிலுள்ள யா/சைவப்பிரகாச வித்தியாலயத்தில் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.
3. **கிளிநொச்சி வலயம்:**- கிளி/கோணாவில் மகாவித்தியாலயத்துக்கு கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு விட்டதாக கூறப்பட்டது.
4. **முல்லைத்தீவு வலயம்:**- தெரிவு செய்யப்பட்ட இடம் போதாது எனவும், பொருத்தமான இடம் தெரிவு செய்யபட்டதும் வேலைகள் யாவும் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.
5. **மன்னார் வலயம்:**- மன்/வண்ணாமோட்டைஅரசதமிழ்கலவன் பாடசாலைக்கு இன்று தான் காணியைக் கொள்வனவு செய்வது தொடர்பான கூட்டம் இடம்பெறுவதாக மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

## Theme 1.1.6 – விளையாட்டு முற்றம்

1. **யாழ்ப்பாணம் வலயம்** :- 2வேலைகள் தவிர்ந்த ஏனைய வேலைகள் யாவும் ஆரம்பிக்கப்ட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டது.
2. **வலிகாமம் வலயம்** :- முற்பணம் தரப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.
3. **வடமராட்சிவலயம்**:- 01 பாடசாலையில் வேலைகள்முடிவுறுத்தப்பட்டுவிட்டதாகவும்,அதற்கான கொடுப்பனவுச் சிட்டை வழங்கப்பட்டுவிட்டதாக கூறப்பட்டது.
4. **தென்மராட்சி வலயம்** :- வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாகவும்,ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.
5. **தீவகம் வலயம்** :- கேள்வி ஒப்பந்தம் செய்யப்பட்டுவிட்டதாகவும், முற்பணம் கிடைக்கப் பெற்றுவிட்டதாக கூறப்பட்டுள்ளது.
6. **கிளிநொச்சி வலயம்** :- வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாகவும்,ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.
7. **முல்லைத்தீவு வலயம்** :- வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாகவும்,ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.
8. **துணுக்காய் வலயம்** :- வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாகவும்,ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.
9. **மன்னார் வலயம்** :- 3 வேலைகள் நடைபெற்றுவருவதாக தெரிவிக்கப்பட்டது.
10. **மடு வலயம்** :- வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாகவும்,ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.
11. **வவுனியா தெற்கு வலயம்** :- வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாகவும்,ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.
12. **வவுனியா வடக்கு வலயம்** :- வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாகவும்,ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது

**பொருட்களின் பெறுகை:-** 31 வேலைகள் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும்,01 வேலை முடிந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

- **ஆசிரியர் மாநாடு:-** ஆசிரியர் மாநாடு நடைபெற்ற வலயங்களை விரைவாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

- **அதிபர் மாநாடு :-** சகல வலயங்களுக்கான அதிபர் மாநாட்டை ஆகஸ்ட் மாதம் நடாத்துமாறு செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

## TSEP

1. **யாழ்ப்பாணம் வலயம் :-** வேலைகள் நடைபெற்றுக் கொண்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.
2. **வலிகாமம் வலயம் :-** யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் வேலைகள் தொடங்கப்பட்டு காணிப் பிரச்சனை காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் ஏனைய வேலைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
3. **வடமராட்சி வலயம் :-** யா/கம்பர்மலை அ.த.க.பாடசாலையில் கூரை வேலைகள் நடைபெற்று வருவதாகவும், பகுதிக் கொடுப்பனவிற்கான கொடுப்பனவுச்சிட்டை கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
4. **தென்மராட்சி வலயம் :-** வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
5. **தீவகம் வலயம் :-** யா/நெடுந்தீவு மாவலித்துறை அ.த.க.பாடசாலை வேலைகள் இடப்பிரச்சனை காரணமாக தாமதமாகி 25.05.2016 ஆம் திகதி தொடங்கப்பட்டு விட்டதாகவும், ஏனைய வேலைகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டது.
6. **கிளிநொச்சி வலயம் :-** வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
7. **முல்லைத்தீவு வலயம் :-** வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
8. **துணுக்காய் வலயம் :-** வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
9. **மன்னார் வலயம் :-** 3 வேலைகள் நடைபெற்றுவருவதாகவும் அதில் 2 வேலைகள் அத்திபார வேலைகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
10. **மடு வலயம் :-** 5 வேலைகளில் 2 வேலைகள் 50% நிறைவுபெற்றுள்ளதாகவும் மிகுதி 2 அத்திவார வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.
11. **வவுனியா தெற்கு வலயம் :-** 03 வேலைகள் கூரை வேலைகள் நடைபெற்று வருவதாக கூறப்பட்டது.
12. **வவுனியா வடக்கு வலயம் :-** 03 வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாக, கூறப்பட்டது.

**நிரல் கல்வி அமைச்சு வேலைகள்.**

- கோப்பாய் கல்வியற் கல்லூரியில் 335 மில்லியனுக்கான வேலைகளில் 45-55 மில்லியனுக்கான வேலைகளே நிறைவடைந்து உள்ளதாகவும், யூன் மாதத்திற்குள் முழு வேலைகளையும் முடிக்க வேண்டும் எனவும் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.
- பாடசாலை வேலைகள் யாவும் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக கூறப்பட்டது.

**அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத் திட்டம் தொடர்பாக ஆராய்ந்த போது:-**

இவற்றிக்கான முன்மொழிவுத் தொகுப்பு தரப்பட்டுள்ளதாகவும்,வலயக் கல்வி அலுவலகத்தின் ஊடாகவே இவ் வேலைகள் செய்யப்பட வேண்டும் எனவும், இத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை மாற்றமுடியாது எனவும் கூறப்பட்டதுடன் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் மதிப்பீடுகளை மேற் கொண்டு யூன் 01 ஆம் திகதி கேள்வி கோருமாறு செயலாளரால் கூறப்பட்டது.

**கல்வி அபிவிருத்தி**

- **யோகா தொடர்பாக ஆராய்ந்த போது:-**
  - இந்திய துணைத் தூதரக கலாச்சார உத்தியோகத்தரினால் யூன் மாதம் 18 ஆம் திகதி யாழ் துரையப்பா விளையாட்டரங்கத்தில் நடைபெற உள்ள யோகா நிகழ்வு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.
  - இவ் யோகா நிகழ்வில் 9000 – 10000வரையான மாணவர்கள் பங்குபற்ற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டதுடன் யாழ்நகரை அண்மித்த பாடசாலைகளிலிருந்து அதிகளவான மாணவர்களும் தூர இடங்களிலிருந்து குறைவான மாணவர்களும் தெரிவு செய்யப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.
  - இம் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து அடுத்த மாதம் 17 ஆம் திகதி வரை யோகாப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.
  - இந்நிகழ்விற்கு வருகை தருவதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை வலயக் கல்வி அலுவலகங்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் இதற்கான செலவு இந்தியத்துணைத் தூதரகத்தால் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

- 2000 ஆசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும் எனவும் காலை 9.00 மணிக்கு முன் மாணவர்கள் உரிய இடத்திற்கு வருகை தர வேண்டும் எனவும் கூறப்பட்டது.
- இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெயர் விபரங்களை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

❖ புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக ஆராயப்பட்ட போது சகல வலயங்கயும் 90% மாணவர்களை 70 புள்ளிகளுக்கு மேல் பெற வைப்பதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு வலயங்களும் தம்மால் இதற்காக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

❖ க.பொ.த(சாதாரணதர) பரீட்சை தொடர்பாக ஆராயப்பட்டபோது கல்வி நிலையில் முதலாம் இடத்திலிருந்த யாழ்ப்பாண மாவட்டம் தற்போது மிகவும் பின்தள்ளப்பட்ட நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு வலயங்களும் தங்களது பாடசாலை அடைவுமட்டங்களை உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

❖ 2.30 மணியளவில் கௌரவ அமைச்சர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்தார். அவரால்

- வழங்கப்படவுள்ள அதிபர் நியமனம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.
- க.பொ.த (சாதாரணதர) முதலாம் தவணைப் பரீட்சை புள்ளிகளை அனுப்பிவைக்குமாறு கோரப்பட்ட போதும் வடமராட்சி வலயம் தவிர ஏனைய வலயங்கள் இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.
- தரம் ஒன்றுக்கான அனுமதிகள் தொடர்பாக ஆராயப்பட்டது.
- மாகாணக் கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கௌரவ கல்வி அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

- பி.ப 3.00 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

இ.இரவீந்திரன்
செயலாளர்,

இ.இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்